## தமிழச்சி தங்கபாண்டியனை 5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடிக்கு தக்க பாடம் புகட்டுவோம்!

## தென்சென்னை தொகுதி ‘இந்தியா’ கூட்டணி செயல்வீரர்கள் கூட்டத்தில் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் உறுதி!

**சென்னை, மார்ச் 25-**

**“தமிழச்சி தங்கபாண்டியனை 5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பிரதமர் மோடிக்கு தக்கபாடம் புகட்டுவோம்” என்று தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ‘இந்தியா’ கூட்டணி செயல்வீரர்கள் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.**

ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் நேற்று முன் தினம் (23.3.2024) நடைபெற்ற பல்லாயிரக்கணக்கானவர்கள் திரண்ட இந்தியா கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:-

இன்றைய நாள் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் மிக முக்கியத்துவமான நாள். தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் மிக முக்கித்துவம்வாய்ந்த நாள் என்று சொல்வதைக் காட்டிலும், தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். 2019ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23ஆம் தேதி இதேநாளில்தான், கடந்த ஐந் தாண்டுகளுக்கு முன்பு கொட்டிவாக்கம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தினோம். அதனைத் தொடர்ந்து கண்ணகி நகரில் நடைபெற்ற மாநாட்டில் கழகத் தலைவர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து வாக்குகள் சேகரித்தார்கள். அவர் பெற்ற வாக்குகள் வித்தியாசம் என்பது 2 லட்சத்து 62 ஆயிரத்து 223 வாக்குகள்.

அண்ணா நின்று வென்ற தொகுதி!

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் தென்சென்னை உருவான ஆண்டு 1957ஆம் ஆண்டாகும். இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு இந்த தென்சென்னைத் தொகுதியில் பேரறிஞர் அண்ணா நாடாளுமன்றத் தேர்தலில் நின்று வென்றிருக்கிறார்கள். முரசொலி மாறன் போட்டியிட்டு வென்றிருக்கிறார்கள். அதேபோல் டி.டி.கே. என்று சொல்லக்கூடிய டி.டி.கிருஷ்ணமாச்சாரி போட்டியிட்டு வென்றிருக்கிறார்கள். டி.ஆர்.பாலு பல முறை போட்டியிட்டு வென்றியிருக்கிறார்கள். வைஜெயந்தி மாலா போன்ற மிகப் பெரிய ஆளுமைகள் எல்லாம் இந்த தென்சென்னைத் தொகுதியில் போட்டியிட்டு வென்றுக்காட்டிய, இந்தத் தொகுதியில்தான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழச்சி தங்கபாண்டியன் 2 லட்சத்து 62 ஆயிரத்து 223 வாக்குகள் பெற்று வெற்றி வாகைச் சூடினார். இந்த வாக்குகள் வித்தியாசம் என்பது இதுவரை இந்தத் தொகுதியில் தேர்தல்கள் நடைபெறத் தொடங்கி 17 தேர்தல்களைச் சந்தித்திருக்கிறோம். முதன்முறையாக அந்த 17வது தேர்தலில்தான் இவ்வளவு பெரிய வாக்குகள் வித்தியாசத்தைப் பெற்றிருக்கிறோம்.

எனவே தென்சென்னை வரலாற்றில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையை சகோதரி தமிழச்சி தங்கபாண்டியன் பெற்றார்கள். அப்படி பெற்ற அந்தப் பெருமையை இந்தத் தொகுதிக்காக தொடர்ந்து அதை நிலைநிறுத்தியும் வருகிறார். இங்கு எனக்கு முன்பு பேசிய தோழமைக் கட்சி தலைவர்கள், திராவிட முன்னேற்றக் கழகச் செயல்வீரர்கள் மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள்.

**அரசியல் குடும்பப் பின்னணியைக் கொண்ட தமிழச்சி தங்கபாண்டியன்!**

தமிழச்சி தங்கபாண்டியனை அறிமுகப்படுத்துவதற்கானக் கூட்டம். சம்பிரதாயத்திற்காக அறிமுகப்படுத்துவது என்பது தேர்தல் பணிகளில் ஒன்று. அவர் ஏற்கெனவே தமிழகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் அறிமுகமானவர். தமிழர்கள் அனைவருக்குமே அறிமுகமானவர். எழுத்தாளராய், பேச்சாளராய், ஒரு சிறந்த அரசியல் குடும்பப் பின்னணி உள்ளவராய், தமிழர்களிடம் மிகச்சிறந்த அறிமுகம் உள்ளவராய் தமிழச்சி தங்கபாண்டியன் திகழ்ந்துகொண்டிருக்கிறார். இருந்தாலும், தேர்தல் காலங்களில் வேட்பாளருக்கு ஓர் அறிமுகம் என்பது அவசியமானது என்ற காரணத்தினால்தான் அவர் தம்மை அறிமுகப்படுத்திக்கொள்ளவும், அவரை அறிமுகப்படுத்தும் பணிகளில் நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

இதே மைதானத்தில்தான் கடந்த மாதத்திற்கு முன்பு மோடி பேசிவிட்டுச் சென்றிருக்கிறார். இந்த மைதானத்தில்தான் தமிழ்நாடு முழுவதும் வந்த பா.ஜ.க.வினர் கூடிய கூட்டமும், தி.மு.க.வினுடைய ஒரே ஒரு நாடாளுமன்றத் தொகுதியினர் வந்து கூடிய கூட்டமும் இணையாக இருக்கிறது என்பது பா.ஜ.க.விற்கும், தி.மு.க.விற்கும் உள்ள வித்தியாசம் என்பதை அனைவருமே நன்றாக உணர்வோம்.

நாடாளுமன்றத்தில் பங்கேற்ற தமிழச்சி தங்கபாண்டியன் வருகைப் பதிவேடு சதவிகிதம், பங்கேற்ற விவாதங்கள் எத்தனை சதவிகிதம் இருந்தது என்பதை இங்கேப் பேசிய தோழமைக் கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதையே நான் திரும்பி சொல்லிக்கொண்டிருப்பது என்பது நேர விரயம். எனவே எந்த வகையானப் பணிகளையெல்லாம் பாராளுமன்றத்தில் ஆற்றினார் என்பதை ஒரிரு செய்திகளை இங்கேச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெண்கள் இடஒதுக்கீட்டு மசோதா அறிமுக நிலையில், அதற்காக அது நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் அவர் பேசியப் பேச்சு என்பது, இந்திய வரலாற்றில் குறிப்பாக பெண்கள் சமுதாயத்திற்கு ஆற்றிய மிகப்பெரிய அளவிலானப் பங்களிப்பு.

**நாடாளுமன்றத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் ஆற்றிய பணிகள்!**

1967ஆம் ஆண்டு பேரறிஞர் பெருந்தகை அண்ணா தமிழ்நாட்டில் சட்டப்பூர்வமாக நிறைவேற்றிய சுயமரியாதைத் திருமணத்தை இந்தியா முழுமைக்கும் சட்டப்பூர்வமாக ஆக்கிட வேண்டும்என்று அவர் ஆற்றிய உரை என்பது சுயமரியாதை உள்ளவர்கள் மிகப்பெரிய அளவில் வரவேற்கிற விஷயமாகும்.

அதேபோல் ஆழ்த்துளைக் கிணறுகளில் விழுந்து ஏற்படுகின்ற இழப்புகள் குறித்து நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை. பல்வேறு இடங்களில் அறியாமைக் காரணமாக ஆழ்த்துளைக் கிணறுகள் ஏற்படுத்தப்பட்டு, அதில் சிறுவர்கள் விளையாடும்போது விழுந்துவிடுகிறார்களே, இதற்கு எதிராக பேசிய பேச்சு என்பது இளஞ்சிறார்களும் இந்த சமூகத்தில் எவ்விதப் பாதிப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது என்று அக்கறையோடு ஆற்றிய உரை. அதேப் போல் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் குடிநீர் பிரச்சினைக் குறித்து அவர் பேசியது.

பணி வரைமுறையின்கீழ் எஸ்.சி., எஸ்.டி., மற்றும் ஓ.பி.சி. சமூகங்களுக்கு ஆசிரியப் பணியிடங்களுக்கு ஏற்பட வேண்டும் என்று பேசியது, பட்டியலினத்திருக்கும், படித்த ஆசிரியர்களுக்கும் அவர் செய்த மிகப்பெரிய அளவிலானப் பங்களிப்பு. தமிழ்நாட்டில் இருக்கிற கடற்கரைகளையெல்லாம் அழகுப் படுத்திட வேண்டும் என்று அவர் ஆற்றிய உரை தமிழ்நாட்டின் கடற்கரைகளுக்கு அவர் செய்த மிகப்பெரிய அளவிலான பங்களிப்பு.

பெண் கொலைகளை இந்திய தண்டனைச் சட்டத்தில் குற்றமாகச் சேர்த்திட வேண்டுமென்று அவர் ஆற்றிய அந்த உரை என்பது பெண்கள் சமூகத்திற்கு அவர் ஆற்றிய மிகப் பெரிய அளவிலான பங்களிப்பு.

ஒன்றுக்கொன்று 60 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கூடுதல் சுங்கச்சாவடிகளை, 60 கி.மீட்டருக்கு ஒன்றுதான் டோல்கேட் இருக்க வேண்டும். 20 கி.மீ., 30 கி.மீட்டருக்குள் ஒரு சுங்கச்சாவடி இருந்து மக்களின் பணத்தைச் சுரண்டுகிறார்களே, இதை எதிர்த்துப் பேசிய ஆற்றல்மிக்க நாடாளுமன்ற உறுப்பினர்தான் மதிப்புமிக்கவர்தான் சகோதரி தமிழச்சி தங்கபாண்டியன்.

அதேபோல் சென்னைத் தெற்கில் சென்னை மாநகரில் இருக்கிற 5 இடங்களில் உள்ள சுங்கச்சாவடிகளை அகற்றிட வேண்டும் என்கிற கருத்தை முன்மொழிந்து, அதைத் தொடர்ந்து தென்சென்னை மிகப்பெரிய அளவிலானப் போராட்டத்தை நடத்தி, Don’t want Dollgate - என்ற போராட்டத்தை நடத்தி, அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி, அன்றைக்கு சமூகவலைத்தளத்தில் ஒரு செய்தியைப் பதிவிட்டார்.

“Don’t want Dollgate - என்ற போராட்டத்தை தென்சென்னை இன்றைக்கு கையில் எடுத்திருக்கிறது. பல்லாயிரக்கணக்கானோர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்று முழக்கமிட்டிருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மாநகரின் எல்லைக்குள் இருக்கிற சுங்கச்சாவடிகளை அகற்றுவோம்” என்று



சொன்னார்கள். அந்த வகையில் இந்தச் சுங்கச்சாவடிகள் சோழிங்கநல்லூரில் இருந்தாலும், மேடவாக்கம் சாலையில் இருந்தாலும், அதேப்போல் பெருங்குடியில் இருந்தாலும், இந்தச் சுங்கச்சாவடிகள் எல்லாம் இன்றைக்கு அகற்றப்பட்டு, மக்களுக்கு மிப்பெரிய அளவிலானத் தீர்வுக் கிடைத்தது என்றால், அதற்கு முதன்முதலில் பிள்ளையார் சுழிப் போட்டவர் தமிழச்சி தங்கபாண்டியன் . இப்படி ஏராளமானச் செய்திகளை சொல்லிக்கொண்டே செல்லலாம்.

**தமிழ்நாட்டுக்காக கோரிக்கைகளை வலியுறுத்தியவர்!**

அவர் மிகச் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர். ஓயாது நமக்காகப் பணியாற்றியவர். தமிழினத்திற்காகப் பணியாற்றியவர். மொழி சிறக்கப் பணியாற்றியவர். இளைய சமுதாயத்தினருக்காகப் பணியாற்றியவர். குழந்தைகள் முதல் குடுகுடு கிழவர்கள் வரை தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கைகளை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, பாராளுமன்றத்தில் எடுத்துச்சொன்ன மிகப்பெரிய ஆளுமை தமிழச்சி தங்கபாண்டியன் , மீண்டும் நம்முடைய தென்சென்னைத் தொகுதியில் களம் காணுகிறார்கள்.

மயிலை த.வேலு , மைலாப்பூர் தொகுதியிலும், தியாகராயர் தொகுதியிலும் ஒரு லட்சம் வாக்குகளுக்கு மேல் பெற்று பாராளுமன்றத்திற்கு தமிழச்சி தங்கபாண்டியனை அனுப்புவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு உண்மையிலேயே இந்தக் கூற்று மெய்ப்பிக்கப்படுகிற வகையில், இந்த இரண்டு தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம், மாலை 4 மணிகளிலிருந்துப் பார்த்துக்கொண்டிருந்தேன். சாரை, சாரையாக வாகனங்களில் அணிவகுத்து வந்ததைப் பார்க்கும்போது வேலு கூளுரைத்தது நிச்சயம் நடைபெற இருக்கிறது.

இரண்டு தொகுதிகளில் மட்டுமே ஒரு லட்சம் என்றால், மீதமிருக்கிற 4 தொகுதிகள், ஏற்கெனவே சோழிங்கநல்லூர் தொகுதியில் 90 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்திருக்கிறது. சைதாப்பேட்டை 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அவர் பெற்றிபெற செய்திருக்கிறது. விருகம்பாக்கம் 34 ஆயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் அவருக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது.

இப்படி சகோதரி தமிழச்சி தங்கபாண்டியன் , நான் எல்லாக் கூட்டத்திலும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். 2019 நாடாளுமன்றத் தேர்தல் என்பது, தமிழக தேர்தல் வரலாற்றில்பெற்ற வெற்றி மகுடம். அன்றையத் தேர்தலைத்தான் வணக்கத்திற்குரிய தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சர் தலைமையேற்று நடத்தியத் தேர்தல். அந்த தேர்தலில்தான் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.கழக வேட்பாளர்கள் வெற்றிப் பெற்றார்கள். திருப்பெரும்புதூரில் மரியாதைக்குரிய டி.ஆர்.பாலு 5 லட்சத்து 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள், திண்டுக்கல்லில் வேலுச்சாமி என்கிற கழக வேட்பாளர் 5 லட்சத்து 38 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற்றார்கள். இயக்க வரலாற்றில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற்றது என்பது 2019ஆம் ஆண்டு பெற்ற மகத்தான வெற்றியாகும்.

அதேபோல் 4 இடங்களில் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் நாம் வெற்றியைப் பெற்றிருக்கிறோம். 3 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் 8 இடங்களில் வெற்றிப் பெற்றிருக்கிறோம். 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் 9 இடங்களில் வெற்றிப் பெற்றிருக்கிறோம். 1 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் 11 இடங்களில் வெற்றிப் பெற்றிருக்கிறோம். 1 லட்சத்திற்கும் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் 5 இடங்களில் வெற்றியைப் பெற்றிருக்கிறோம். எனவே அந்தத் தேர்தலில்தான் 40க்கு 39 என்று இந்த வகையிலான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியைப் பெற்று வருகிறோம்.

இன்றைக்கு 36 கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மேடையிலேயே வீற்றிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இன்று அதிகாலையிலேயே தஞ்சையில் நடைப்பயிற்சியிலேயே வாக்குகள் சேகரித்துவிட்டு, அறைக்கு சென்றபோது 10க்கும் மேற்பட்ட டெல்டா மாவட்டத்தில் இருக்கிற அத்தனை விவசாயச் சங்கங்களும் ஒட்டுமொத்தமாகஇந்தியாகூட்டணிக்கு ஆதரவளிக்கிறோம் என்று ஆதரவுக் கடிதங்களைத் தந்திருக்கிறார்கள். இன்று இரவு 10 மணிக்கு திரும்பியவுடன், நாளை நூற்றுக்கணக்கான அமைப்புகளைச் சார்ந்தவர்கள், தமிழ்நாட்டில் இதுவரை வேறெப்போதும் இல்லாத அளவுக்கு எல்லா அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் ஒருங்கிணைந்து நாங்கள் தி.மு.க.கூட்டணியைத்தான் ஆதரிப்போம் என்று ஒருமித்தக் கருத்தோடு தொடர்ந்து ஆதரவுக் கடிதங்களைத் தந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆக, இந்தக் கூட்டணி இன்று அபரிமிதமாக வளர்ந்து உள்ளது. நிச்சயமாக வருகிற ஜுன் 3ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள். ஜுன் 4ஆம் தேதி மாலை 40 தொகுதிகளின் தேர்தல் முடிவுகள் வெளிவரும்போது, தமிழ்நாட்டில் 40 தொகுதிகளிலும், தி.மு.கழகத்தையும், தோழமைக் கட்சிகளை எதிர்த்து நின்று போட்டியிட்டவர்கள் ‘டெபாசிட் இழந்தார்கள்’ என்ற நிலை வரத்தான் போகிறது. நான் ஜோசியம் சொல்வதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் நிச்சயமாக இது நடக்கத்தான் போகிறது. அதற்கு இன்றைக்கு நடந்த ஒரு செய்தியை உதாரணமாகச் சொல்கிறேன்.

ஒடிசாவில் பா.ஜ.க. கூட்டணி முடிவிற்கு வந்திருக்கிறது. மிகப்பெரிய அளவில் கூட்டணியை பா.ஜ.க.வால்எதிர்ப்பார்க்கப்பட்ட ஒடிசாவில் கூட்டணிக்கு முறிவு ஏற்பட்டிருக்கிறது. தனித்தனியாக நிற்கிற நிலை வந்திருக்கிறது. பொதுவாக ஆளுங்கட்சி தேர்தலில் நிற்கிறபோது வெற்றிபெறும் என்றால்தான் நிறைய கட்சிகள் ஆதரவு தருவார்கள். தோழமைக் கட்சிகள் கூடுவார்கள். நிறைய அமைப்புகள் ஆதரவுத் தருவார்கள். ஆனால் இன்றைக்கு பாரதிய ஜனதாகட்சி கூட்டணியில் நடைபெற்றிருக்கிற ஒன்று. குஜராத் மாநிலம் வடோதராத் தொகுதியைச் சேந்தவரும், சவர்கந்தா என்ற தொகுதியைச் சேர்ந்தவரும், 2 நாடாளுமன்ற வேட்பாளர்கள் திஞ்சன்பன்பட் என்பவரும், பிகாஜி தாகூர் என்பவரும் இன்றைக்கு வேட்பாளராக விருப்பமில்லை என்று தங்களை அதிலிருந்து விடுவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

**‘இந்தியா’ கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசம்!**

பா.ஜ.க வேட்பாளராக அறிவித்து, அறிவித்ததற்குப்பிறகு இரண்டு வேட்பாளர்கள் நாங்கள் களத்தில் நிற்பதற்கு தயாராக இல்லை என்று ஓடுகிறார்கள் என்று சொன்னால், பா.ஜ.கட்சி மிகப்பெரிய அளவில் மண்ணைக் கவ்வப் போகிறது என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்ட காரணத்தினால்தான் தேர்தலில் நிற்பதையே இன்றைக்கு தவிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதுகூட பரவாயில்லை.

வடகிழக்கு மாகாணங்கள் 7 இருக்கிறது. அஸ்ஸாம், மணிப்பூர், நாகாலாந்து, திரிபுரா, மேகாலயா போன்ற 7 மாநிலங்களில் பா.ஜ.க அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறது. மணிப்பூர், நாகாலாந்து, திரிபுரா போன்ற மாகாணங்களில் நாங்கள் தேர்தலில் நிற்கப் போவதில்லை என்று பா.ஜ.க.வே அறிவித்திருக்கிறது. இந்தியாவில் 36 மாநிலங்கள் இருக்கிறது. இந்த 36 மாநிலங்களில் வடகிழக்கு மாகாணங்களில் 3 மாநிலங்களில் பா.ஜ.க. தேர்தலில் நிற்காது என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படியானால், பா.ஜ.கவின் தோல்விக் குறித்து முழுமையான விசயங்களை அறிந்த காரணத்தினால்தான் வருகிற தேர்தலில் மூன்று மாநிலங்களில் நாங்கள் நிற்கவேப் போவதில்லை என்று அந்தக் கட்சி இன்றைக்கு அறிவித்திருக்கிறது. எனவே இன்றைக்கு நமக்கு வெற்றி வாய்ப்பு என்பது பிரகாசமாக இருந்துகொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி!

தமிழகத்தைத் தொடர்ந்து மோடி வஞ்சித்துக்கொண்டிருக்கிறார் என்பதற்கு பல்வேறு செய்திகளைச் சொல்ல முடியும். தமிழச்சி தங்கபாண்டியன் இங்கே பேசும்போது சொன்னார். 33 ஆயிரம் கோடி நாம் வெள்ள நிவாரணத்திற்குக் கேட்டோம். ஒரு பைசாகூட தரவில்லை. 20 ஆயிரம் கோடி ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகை இன்னமும் தரவில்லை. மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான ஒன்றிய அரசின் பங்குத் தொகைத் தரவில்லை. இப்படி எல்லாத் துறைகளுக்கும் ஒன்றிய அரசின் பங்குத் தொகைகளைத் தராமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்ற செய்தியை சேலத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் நரேந்திர மோடி சொல்லிவிட்டு சென்றிருக்கிறார்.

நாங்கள் எதற்காக நிதித் தராமல் இருக்கிறோம் என்றால், கொடுத்தால் முறையாக செலவிடமாட்டார்கள் என்பதற்காகத்தான் என்று சொல்லியிருக்கிறார். அப்படியானால் நிதியைத் தரவில்லை என்பதை பட்டவர்த்தனமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். எனக்கு முன்னால் பேசிய ஆம் ஆத்மிக் கட்சியைச் சேர்ந்த சகோதரி சொன்னார். இந்திய வரலாற்றிலேயே ஒரு முதல்வரை கைது செய்தது என்பது இதுவரை நடந்திராத ஒன்று. கடந்த இரண்டு மாதங்களில் 2 மாநில முதல்வர்களை தொடர்ந்து கைது செய்திருக்கிறார்கள். எனவே இப்படி ஒரு கொடுங்கோன்மை ஆட்சி இந்தியாவில் இருக்கவே கூடாது என்ற உறுதியை நாம் ஏற்க வேண்டும்.

தமிழ்நாட்டில் இருந்து நாம் தருகிற ஒவ்வொரு ரூபாய் வரிக்கும் நிதிப் பகிர்வாக 29 பைசாவைத்தான் நமக்கு திருப்பி அளிக்கிறார்கள். உத்திரபிரதேச மாநிலம் கொடுக்கிற 1 ரூபாய் வரிக்கு திருப்பித் தருகிற நிதி 2 ரூபாய் 2 பைசாவும், மத்தியபிரதேச மாநிலம் கொடுக்கிற 1 ரூபாய் வரிக்கு திருப்பித் தருகிற நிதிப் பகிர்வு 1 ரூபாய் 7 காசும், இராஜஸ்தான் மாநிலம் கொடுக்கிற 1 ரூபாய் வரிக்கு திருப்பித் தருகிற நிதிப் பகிர்வு 1 ரூபாய் 16 பைசாவும், கேரளா மாநிலம் கொடுக்கிற 1 ரூபாய் வரிக்கு திருப்பித் தருகிற நிதிப் பகிர்வு 62 காசும், தெலுங்கானா மாநிலம் கொடுக்கிற 1 ரூபாய் வரிக்கு திருப்பித் தருகிற நிதிப் பகிர்வு 40 காசும், மிக, மிக குறைவாக தமிழ்நாட்டிற்கு 29 பைசாவைத்தான் நிதிப் பகிர்வாக அளிக்கிறார்கள்.

**மோடிக்கு பாடம் புகட்டுவீர்!**

எனவே மிகப்பெரிய அளவில் தமிழ்நாட்டை வஞ்சித்துக்கொண்டிருக்கிற மோடிக்கு நாம் பாடம் புகட்டியாக வேண்டும். இந்தியாவைவிட்டு ஓடவிடவேண்டும். தமிழ்மொழியை நரேந்திர மோடி எங்கு சென்றாலும், திருக்குறளை மறக்காமல் சொல்கிறார். தமிழ் மொழிக்கு மிகப்பெரிய அளவில் தீங்கு விளைவித்துக் கொண்டிருக்கிறார் என்பதற்கு, கடந்த 2014 தொடங்கி 2022 வரை 10 ஆண்டுகளில் 10 கோடி பேர் பேசும் தமிழ் மொழிக்கு ரூ.74 கோடி நிதி அளித்திருக்கிறார்கள். வெறும் 16 ஆயிரம் பேர் பேசும் சமஸ்கிருத மொழிக்கு ரூ.1,488 கோடி, அதை வளர்த்தெடுப்பதற்கு அளித்திருக்கிறார் நரேந்திர மோடி. எனவே மிக, மிக வென்று தமிழ்நாட்டை வஞ்சிப்பதில் எத்தனை மிக வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம். அந்த அளவிற்கு தமிழ்நாட்டை வஞ்சித்திருக்கிறார்.

எனவே இங்கு வந்திருப்பவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் செய்திருக்கிற சாதனைகளையெல்லாம் எடுத்துச்சொல்லி, குறைந்தது ஒருவர் 100 பேரையாவது சந்தித்து இச்சாதனைகளை விளக்கிக் கூறி, ஒரு மாத இடைவெளிக் கூட ஏப்.19க்கு இல்லை. இரண்டு வாரங்கள் இடைவெளிதான் உள்ளது. எனவே சாதனைகளை எடுத்துச்சொல்லி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களை மிகப் பெரியவாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டுமாய் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

**5 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம்!**

தமிழச்சி தங்கபாண்டியன் கடந்தத் தேர்தலில் 2 லட்சத்து 62 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் ஒரு மடங்கில் வெற்றிபெற்றதைக் காட்டிலும், 5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றால்தான், இந்தக் கூட்டம் சிறப்பாக நடந்தது, இதில் நாம் கலந்துகொண்டோம். இந்தத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றார். நமக்காக அன்றாடம் உழைத்துக் கொண்டிருக்கும் நம்முடைய கழகத் தலைவர் கரத்தை வலுப்படுத்த வேறொரு காரியம் இருக்கவே முடியாது, அவருடைய உழைப்பிற்கு நன்றி சொல்ல, அவருடைய செயலுக்கு நாம் பாராட்டு தெரிவிக்க இவரை 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் நாடாளுமன்றத்திற்கு அனுப்புவோம் என்ற ஒன்று மட்டும்தான் வழி என்று கூறி விடை பெறுகிறேன் நன்றி. வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.



வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெரம்பலூர் தொகுதியில் இந்தியா கூட்டணி கட்சியின் சார்பில், போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கே.என்.அருண் நேரு புத்தனம்பட்டி கோட்டூர், அபிநமங்கலம், பகலவாடி காளிப்பட்டி, அம்மாபட்டி உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அவருடன் வடக்கு மாவட்டச் செயலாளர் தியாகராஜன் எம்.எல்.ஏ., ஸ்டாலின் குமார் எம்.எல்.ஏ., தர்மன், ராஜேந்திரன், ஒன்றியச் செயலாளர் ராமச்சந்திரன், அண்ணாதுரை, ஸ்ரீதர், மயில்வாகணன், காட்டுக்குளம் கணேசன், ஆப்பிள் கணேசன் மற்றும் கூட்டணிக் கட்சித் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடன் சென்றனர்.



வடசென்னை தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களை ஆதரித்து இராயபுரம் தொகுதி கூட்டத்தில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி சேகர் எம்.எல்.ஏ ஐ.ட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., தா.இளைய அருணா எம்.சி. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.